தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**5 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

# நற்பண்புகள்

மண்ணில் வந்து பிறந்த உயிர்களிலே உயர்ந்தது மனிதப் பிறப்பு. அந்த உயரிய பிறப்பை எடுத்த எமது வாழ்வு மேம்பட நற்பண்புகள் பெரிதும் துணை நிற்கின்றன.

பெற்றோரைப் போற்றுதல், அன்பு செய்தல், உறவுகளை மதித்தல், உண்மை பேசுதல், உழைத்து உண்ணுதல், ஒற்றுமை காத்தல், தாய்நாட்டை நேசித்தல், நன்றி மறவாமை இவை யாவும் நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளில் சிலவாகும்.

தமிழ் இனத்தின் துயர் துடைக்க, அறத்தின் வழி நின்று உயிர்க்கொடை தந்தவர்கள் மாவீரர்கள். அவர்களின் தியாகத்தை என்றும் மறவாது போற்றுவதும் தமிழர்கள் ஆகிய நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளில் ஒன்றே.

எனவே, மழலையர் நாம் எங்களின் மழலைப் பருவம் தொடக்கம் நற்பண்புகளை வளர்த்து, எங்கள் இனத்திற்கும் தாய்நாட்டிற்கும் பெருமை சேர்ப்போமாக.

நன்றி

வணக்கம்.